# உடன் உதவும் பயில்வுச் செயலட்டை

## க.பொ.உயர்தரம் - தமிழ் - சங்கப்பாடல் - 04 - நேரம்:30 நிமிடம்

## வினாப்பத்திரம்

**தயாரிப்பு :திரு.எ.த.ஜெயரஞ்சித்**

BA. (Hons), M.A. (Tamil), Dip.in.Edu. (Merit Pass),Dip.in.Office Administration (First class),
Dip.in.Tamil(Colombo Tamil sangam),Dip.in.School Management(NIE)

**01. மேல்வரும் செய்யுளை வாசித்து அவற்றின்கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.**

**(அ)** வாரலெஞ் சேரி தாரனின் றாரே
அலரா கின்றாற் பெரும காவிரிப்
பலராடு பெருந்துறை மருதொடு பிணித்த
ஏந்துகோட் டியானைச் சேந்தன் றந்தை
அரியலம் புகவினங் கோட்டு வேட்டை
நிரைய வொள்வா ளிளையர் பெருமகன்
அழிசி யார்க்கா டன்னவிவள்
பழிதீர் மாணலம் தொலைவன கண்டே.

**வினாத்தொகுதி:01**

(i) இப்பாடல் இடம்பெறும் துறையை விளக்குக.

(ii) இப்பாடலூடாக தோழி, தலைவனுக்கு உரைக்கும் செய்திகள் யாவை?

(iii) இச் செய்யுளில் வெளிப்படும் பழந்தமிழ்கால இலக்கிய மரபுகளைக் குறிப்பிடுக.

**(12 புள்ளிகள்)**

**வினாத்தொகுதி:02**

(i) இப்பாடலில் பின்வரும் தொடர்கள் எவ்வெப் பொருள்கயில் கையாளப்பட்டுள்ளதெனக் குறிப்பிடுக.

- வாரல்:
- தாரல்:
- நிரிய ஒள் வாள்:
- தொலைதல் :

(ii)இப்பாடலில் கையாளப்பட்டுள்ள உவமை அணிகளை எடுத்துக்காட்டுக.

(iii) இப்பாடலில் காவிரி ஆற்றினதும் சோழநாட்டினதும் வளம் எடுத்துக்காட்டப்பட்டவாற்றைத் துலக்குக.

(12 புள்ளிகள்)

**வினாத்தொகுதி:03**

(i) இப்பாடலில் கவிஞர் கூற விளைந்த பேசுபொருளை விளக்குக.

(ii) இப்பாடலில் பின்வரும் தொடர்கள் எவ்வெப் பொருள்கயில் கையாளப்பட்டுள்ளதெனக் குறிப்பிடுக.

- சேரி:
- அலர்:
- அரியல்:
- நிரையம்:

(iii) இப்பாடலில் பரணரால் கையாளப்பட்ட உத்திகளை எடுத்து விளக்குக. (12 புள்ளிகள்)

**<u>வினாத்தொகுதி:04</u>**

(i) இப்பாடலில் இடம் பெறும் உள்ளுறை உவமத்தை எடுத்துக்காட்டுக.

(ii)அழிசி,சேந்தன் ஆகிய மன்னர்கள் பற்றி இப்பாடலில் குறிப்பிடப்பட்ட செய்திகளை எடுத்துக்காட்டுக.

(iii)இச்செய்யுள் புலப்படுத்தும் சங்ககால பண்பாடுகளை எடுத்துக்காட்டுக.

(12 புள்ளிகள்)

**<u>வினாத்தொகுதி:05</u>**

(i) பாடலில் கையாளப்பட்டுள்ள முதல்,கரு,உரிகளை எடுத்துக்காட்டுக.

(ii) பாடலில் கையாளப்பட்ட திணை மயக்கம் யாதெனக்குறிப்பிட்டு விளக்குக.

(iii) ''காவிரிப் பலராடு பெருந்துறை'' ,''மருதொடு பிணித்த ஏந்துகோட்டி யானை''எனும் தொடர்கள் புலப்படுத்தும் உட்கருத்துக்களை இனங்கண்டு விளக்குக.

(12 புள்ளிகள்)